RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2525

OPEN ACCESS

# மாரியம்மன் தொடர்பான வாய்மொழிக்கதைகளில் வெளிப்படும் கதையாடல்கள்- இலங்கையை மையப்படுத்திய ஆய்வு

கி. கலைமகள் [அ, *], ச. கார்மேகம் [அ]

[அ] நாட்டார் வழக்காற்றியல்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

# Narratives Emerging in Oral Traditions related to Mariamman – A study focused on Sri Lanka

K. Kalaimagal [a, *], S. Karmegam [a]

[a] Department of Folklore, St.Xavier's College (Autonomous), Manonmaniam Sundarnar University, Thirunelveli, Tamil Nadu, India

* Corresponding Author: kalaimagak@esn.ac.lk

Received: 19-08-2022
Revised: 28-10-2022
Accepted: 12-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Stories can be categorized as mythological stories, folk tales, and regional stories. Among these, mythological stories convey religious principles; they are often considered sacred. Additionally, they are associated with theology and rituals. The characters are not human beings, but they mostly possess human qualities. Their actions are said to occur in a previous world. Regional stories concern ordinary people and matters unrelated to humans. They reflect human conflicts, aspects of everyday life, and are also centered around individual characters. In Sri Lanka, stories related to Mariamman were collected both in written form and through oral traditions. These stories describe the appearance of the goddess, her glory, and the reasons for her visit to the village. The village stories are sometimes centered around individuals and sometimes around the community. Additionally, they feature characters other than humans. These stories may be related to worship or may not be. The stories in written form have been adapted from the oral traditions of the people and have undergone changes. This essay aims to study the origin of these stories, the social background for them, the concepts related to the deity that they reveal, and the social and political expressions of the people conveyed through the stories.

**Keywords:** Mariamman, Sri Lanka, Oral Traditions, Regional Stories

## முன்னுரை

தெய்வங்கள் மக்களைக் காக்குமெனவும் பிரச்சனைகளுக்கானத் தீர்வுகளைத் பெற்றுத்தரும் எனவும் மக்கள் நம்புகின்றனர். இதன் அடிப்படையில் வேண்டல், நேர்த்தி செய்தல் என தெய்வத்தைத் திருப்தி செய்கின்றனர். இவற்றோடு; தெய்வங்கள் தொடர்பாக மக்கள் பல வாய்மொழிக் கதைகளை உருவாக்கியுள்ளனர். இக்கதைகள் தெய்வத்தின் தோற்றம், தெய்வருள் பற்றியதாக மட்டுமின்றி அத்தெய்வங்களின் மூலம் சமூக அரசியல் சார்ந்த தங்கள் மனப்பதிவுகளையும் வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட உள்நாட்டுப் போர்ச்சூழலில் தெய்வங்கள் மக்களை ஆற்றுப்படுத்தவதாகவும் வாழ வேண்டும் என்னும் நம்பிக்கையளிக்கும்

வெளிகளாகவும் செயற்பட்டுள்ளன. கோயிலில் இருந்தால் குண்டுவிழாது, தெய்வம் காப்பாற்றும், நேர்த்தி வைத்தால் காணாமல் ஆக்கபட்டோர் திரும்பி வருவார்கள் ஆகிய நம்பிக்கைகள் மக்களிடம் வேரூன்றியிருந்தன. மேலும் தங்கள் வாழ்வில் நடந்த போர்காலச் துயரச் சம்பவங்களையும் இராணுவம் தொடர்பான, விடுதலைப்புலிகள் தொடர்பான கருத்துக்களையும் மாரியம்மன் தொடர்பான கதைகள் ஊடாக மக்கள் வாய்மொழிரீதியாக வெளிப்படுத்தியுள்ளதுடனும் அதனை மீள்நினைவுபடுத்தியும் வருகின்றனர். அவ்வகையிலே மக்களிடமிருந்து வாய் மொழியாகச் சேரிக்கப்பட்ட கதைகள் இங்கு தரப்படுகின்றன. கதை கூறியவர்களின் விருப்பிற்கேற்ப அவர்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கதை 1:

இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை என்னும் மாவட்டத்தில் தம்பலகாமம் என்னும் ஊர் உள்ளது. இங்கு தமிழர், இஸ்லாமியர் ஆகிய மக்கள் வாழ்கின்றனர். தம்பலகாமத்திலுள்ள கள்ளிமேடு என்னுமிடத்தில் முத்துமாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் 1984இல்; கருவறையும் மண்டபமும் மட்டுமே கொண்டதாக இருந்துள்ளது. அம்மண்டபம் மணல்கொட்டி நிரப்பிய திறந்தமண்டபமாகும். ஒருநாள் பகல்வேளையில் மக்கள் கோயிலைச் சுற்றியுள்ள வயலில் மக்கள் வேலை செய்துகொண்டிருந்துள்ளனர். அப்போது விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த விக்கி, வேல் ஆகியோர் மாரியம்மன் கோயிலுக்குவந்து வழிபட்டுவிட்டு வெளிமண்டபத்தில் படுத்துறங்கியுள்ளனர். அப்போது சேலையுடுத்திய ஒரு பெண் வந்து இருவரையும் எழுப்பி 'என்ன படுக்கிறீங்க! எழும்புங்க!' என எழுப்பியுள்ளார். உடனே இருவரும் திடுக்கிட்டு எழுந்து பார்த்துள்ளனர். அப்பெண்ணைக் காணவில்லை. அப்போது ஆமியின் 'ரக்' வாகனச் சத்தம் கேட்டுள்ளது. இவர்கள் இருவரும் எழுந்தோடி உயிர் தப்பியுள்ளனர்.

## கதை 2:

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு என்னும் மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் 39ஆம் கிராமமுள்ளது. அங்குள்ள மாரியம்மன் கோயில் தொடர்பானதாக இக்கதை அமைகின்றது.

கோயிலிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் ஒரு மாமரத்தோட்டமும் அத்தோட்டத்தில் பெரியகிணறும் இருந்துள்ளன. கோடைகாலத்தில் அக்கிணற்று நீர் வற்றாமல் இருப்பதால் அவ்வூரிலிருந்த பெண்கள் குளிப்பதற்கு அங்கு செல்வது வழக்கமாய் இருந்துள்ளது. யுத்த காலத்தில் இவ்வூரிலிருந்து பலகுடும்பங்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து செல்ல ஒருசில குடும்பங்கள் மட்டுமே இங்கே தங்கிருந்துள்ளனர். இக்காலகட்டத்தில் விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் மாமரத்தோட்டத்திற்கருகில் இருந்துள்ளனர். அதனால் அவர்களும் மேற்குறித்த கிணற்றில் குளிக்க வருவதால், அவர்கள் இல்லாத வேளையிலே அவ்வூர்ப்பெண்கள்; அங்கு சென்று குளித்து வந்துள்ளனர். ஒருநாள் ஒருபெண் தனது பத்துவயது மகனுடன் அக்கிணற்றுக்குக் குளிக்கச் சென்று, மகனைக் குளிப்பாட்டும்போது, இயக்கத்தினர் அங்குக் குளிக்க வந்துள்ளனர். அவர்கள் அப்பெண்ணிடம் 'அக்கா இந்தக்கிணற்றில் நாங்க குளிக்கப்போறம். நீங்க போய் உங்கட கோயில் கிணற்றில் குளிக்கலாம் தானே! நாங்க கேள்விப்பட்டம் கோயில் கிணற்றுத் தண்ணி நல்ல தண்ணியாம். எப்பயும் வத்திறதில்லெண்டு. உங்களுக்கு அது பக்கம் தானே' எனக் கூறியுள்ளனர். அதற்கு அந்தப்பெண் 'தம்பி! கோயில் கிணத்தல ஒருத்தரும் குளிக்கிறதில்ல. அங்க குளிக்கயும் கூடாது' எனக் கூறிவிட்டு மகனை அழைத்துக்கொண்டு வந்துள்ளார்.

ஒருநாள் இரவு ஏழு மணிக்குப் பெடியனுகள் ஐந்து பேரும் வெல்லாவெளிச் சந்தைக்குப் போய் மீன், இறைச்சி எல்லாம் வாங்கிச் சமைத்தபின்னர் உடுப்பெல்லாம் எடுத்துக்கொண்டு கோயில் கிணற்றிற்குக் குளிக்கச் சென்றுள்ளனர். இதனைப் பார்த்த அப்பெண் கோயில் தலைவரிடம் கூறியுள்ளார். அதற்கு அவர் 'நாம ஒண்டும் பேசேலாது. அவட (அம்மன்) கிணறு; அவ பாத்துப்பா' எனக் கூறியுள்ளார். அவ்வேளையில் அவ்வூருக்குமேல் இராணுவத்தின் 'ஹெலிகொப்டர்' சுத்தியுள்ளது. இதனைப் பார்த்துப் பயந்த மக்கள் பிள்ளைகளைக் அழைத்துக்கொண்டு பங்கருக்குள்போய் ஒளிந்துள்ளனர். அப்போது கோயிலுக்கு மேல் மற்றுமொரு ஹெலிகொப்டர்; பறந்துவந்து சுற்றியுள்ளது. பின்னர் நன்றாகப் பணிந்து கோயிலுக்குமேல் நின்று குண்டுபோட்டுத் தாக்கியுள்ளது. அத்தாக்குதலில் அக்கிணற்றில் குளிக்கவந்த இயக்கத்தினர் இறந்துள்ளனர். அதன்பின்னர் எவரும் கோயில் கிணற்றில்; குளிக்க வருவதில்லை. அவர்களை மாரியம்மன்தான் தண்டித்ததாக அவ்வூர்மக்கள் நம்புகின்றனர்.

இவ்விரு கதைகளும் விவசாயத்தை பிரதானமாகக் கொண்ட சமூகத்தில் சேகரிக்கப்பட்டவைகளாகும். ஒரு கதையில் மாரியம்மனை வழிபட்டுவிட்டு கோயிலில் படுத்துறங்கும் விடுதலைப்புலியை மாரியம்மன் காப்பாற்றுகின்றார்; மற்றைய கதையில் கோயில் கிணற்றில் குளித்ததால் அம்மன் தண்டிக்கின்றார். கோயில் கிணற்று நீர் புனித தீர்த்தமாக மக்களால் நம்பப்படுவதால் அதில் குளித்தல் என்பது பாவச்செயலாகக் கருதப்படுகின்றது. இதனால் அதில் குளித்த இயக்க உறுப்பினர்கள் தண்டிக்கப்படுகின்றனர். அம்மன் தன்னை வணங்கும் இயக்க உறுப்பினர்களைள் காப்பாற்றுகின்றார். கோயில் கிணற்றில் குளிக்கக் கூடாது என்னும் ஊர்விதியை மீறும் இயக்க உறுப்பினர்களைத் தண்டிக்கின்றார். இவை இரண்டும் மக்கள் இயக்கத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கையும் விமர்சனமுமாகும். முதல் கதையில் மக்கள் இயக்கத்தை ஆதாரிக்கின்றனர். இராண்டாவது கதையில் மக்கள் அவர்களை விமர்சிக்கின்றனர்.

### கதை 3:

வடமாகாணத்தில் மன்னார் என்னும் மாவட்டமுள்ளது. இங்குள்ள கட்டுக்கரைக்குளம் மன்னார் மடு பிரதேசச செயலாளர் பிரிவிலுள்ளது. இக்குளம் மதவாச்சி மன்னார் பிரதான வீதியின் வலது பக்கத்திலுள்ளது. இது மன்னாரிலுள்ள பெரும் நீர்ப்பாசனக் குளமாகும். இக்குளம் பெருங்குளம், இராட்சதக்குளம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் போர்க்காலச் சூழலில் தமிழர்கள் வாழும் பகுதிகள் புலிகளின் பாதுகாப்பு கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் இராணுவப் பாதுகாப்பு கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் அமைந்திருந்தன. இங்கு மக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு செல்ல வேண்டிய தேவைகள் இருப்பின் அனுமதி பெற்றே செல்லவேண்டும் என்னும் கட்டுப்பாடு இருந்தது. அவ் அனுமதி அனைவருக்கும் வழங்கப்படவில்லை. கட்டுரைக்குளமும் இராணுவப் பாதுகாப்புப் பகுதிக்குளிருந்தது. இதனால் கட்டுக்கரைக்குளத்தை அண்மித்து வாழ்ந்த மக்கள் 1990களில் அப்பகுதியிலிருந்து முற்றாக இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். மீளவும் 2000களில் குடியமர்ந்துள்ளனர். அப்போது கட்டுரைக் குளத்தருகில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோயில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததால் அக்கோயிலில் மக்கள் வழிபாடுசெய்ய தடைவிதிக்கப்பட்டிருந்தது. அவ்வேளை நடைபெற்ற சம்பவமாக இக் கதையைக் கூறுகின்றனர்.

அக்காலகட்டத்தில் இராணுவ முகாமிற்குப் பொறுப்பான பாதுகாப்புப்படையினர் ஒருவர் குளத்தில் தோணியில் செல்லும்போது அவரது பிஸ்ரோல் குளத்திற்குள் விழுந்துள்ளது. அந்தப் பிஸ்ரோல் புதுவகையைச் சேர்ந்தது. அதனால் அவர் தோணிக்காரர்களிடம் கூறி அதனை எடுத்துத்தரும்படி கேட்டுள்ளார். அவர்கள்; எவ்வளவோ முயன்றும் கிடைக்கவில்லை. இதனால் கவலையடைந்த அதிகாரியிடம் தோணிக்காரர்கள் குளத்தருகேயுள்ள மாரியம்மன் கோயிலில் நேர்த்தி வைக்கும்படி கூறியுள்ளனர். அதிகாரியும் மிகவும் மன வேதனையுடன் நேர்த்தி வைத்துள்ளார். அடுத்தநாள் தோணி;க்காரர்களை அழைத்து மீண்டும் தேடும்படி அதிகாரி கேட்டுள்ளார். அதன்படி அவர்களும் தேட பிஸ்ரோல் கிடைத்துள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்த

அதிகாரி தோணிக்காரர்களுக்குச் சன்மானங்கள் வழங்கியுள்ளார். பின்னர் அவ்வூர் மீனவர்களும் மக்களும் அக்கோயிலை வழிபடுவதற்கு மீண்டும் அனுமதி கேட்க, அதிகாரியும் அவ்வூரைச் சேர்ந்தவர்கள் மட்டும் வந்து வழிபட அனுமதி வழங்கியுள்ளார். அத்துடன் கோயில் திருவிழாவின்போது இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களும் ஒருநாள் திருவிழாவிற்கான பொறுப்பை ஏற்றுவந்துள்ளனர்.

குறிப்பிட்ட அதிகாரிக்குப் பின்னர் புதிய அதிகாரி பொறுப்பெடுத்துளளார். அவர் மீண்டும் கோயிலுக்குச் செல்ல தடைவிதித்ததோடு கோயிலை அசுத்தப்படுத்தியுமுள்ளார். மேலும் அவ்வூர் மக்களின் சொத்துக்கள் வள்ளம், வலை போன்றவற்றையும் அழித்துள்ளார். இவ்வேளையில் மக்கள் அம்மனை வழிபடுவதற்குக் கோயிலுக்கு வந்தபோது அனைவரையும் திருப்பி அனுப்பியுள்ளனர். இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் அதிகாரிக்கும் இன்னும் சில பொலிஸ்களுக்கும் அம்மை நோய்த்தொற்று ஏற்பட்டு, நோய் குறையாமல் இருந்துள்ளது. அதிகாரி அக்கோயில் பூசாரியிடம் உதவி கேட்டுள்ளார். அவரும் இவர்களுக்கான உதவிகளைச் செய்து கொடுத்துள்ளதோடு மாரியம்மன் கோயிலில் நேர்த்தி வைக்குமாறு கூறியுள்ளார். அவ்வாறே அதிகாரியும் நேர்த்தி வைத்துள்ளார். அதன்பின்னரே அம்மைநோய் குறைந்துள்ளது. இதன்பின்னர் அவ்வதிகாரிக்கு அன்றிலிருந்து இக்கோயில்மீது பயமும் பக்தியும் ஏற்பட்டுள்ளது. அதனால் கோயில் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதோடு மக்களையும் வழிபடுவதற்கு அனுமதி அளித்துள்ளார்.

இக்கதையில் இராணுவத்தினர் மாரியம்மனை வழிபட தடைவிதிக்கும்போதும் கோயிலை அசுத்தப்படுத்தும்போதும் மாரியம்மன் தான் இங்கு இருப்பதை சில சம்பவங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளதாக மக்கள் நம்புகின்றனர். இக்கதை மூலம் இராணுவத்தைத் மாரியம்மன்; அச்சுறுத்தும் மக்களைக் காக்கும் என்னும் நம்பிக்கை வெளிப்படுகின்து.

## கதை 4:

யாழ்ப்பாண மாகாணத்தில் வவுனியா உள்ளது. இது அதிக விவசாய நிலம் உடைய பகுதியாகும். இங்கு தமிழர், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இன மக்களும் வாழ்கின்றனர். இங்கு யுத்ததிற்குப் பின்னர் பல சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாழும் மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். வவுனியாவிலுள்ள ஓமந்தை என்னும் பகுதியில் கிடாச்சூரி கண்ணகை - மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது.

வவுனியாவிலிலுள்ள கிடாச்சூரி குளத்திற்கருகில் கண்ணகை முத்துமாரியம்மன் கோயில்; அமைந்துள்ளது. அக்குளத்திற்கும் கோயிலுக்குமிடையே சிறு நிலப்பரப்பு காணப்படுகின்றது. அந்நிலப்பரப்பில் பனிச்சமரங்கள் உள்ளன. 2000ஆம் ஆண்டு அங்கு இராணுவமுகாம் இருந்துள்ளது. அங்குள்ள இராணுவத்தினர் கோயிலுக்கு முன்னாலுள்ள சிறு நிலப்பரப்பில் சிறுபுத்தர் கோயிலைக் கட்டுவதற்கு முடிவுசெய்து கோயில் நிர்வாகத்திடம் அனுமதி கேட்டுள்ளனர். ஆனால் நிர்வாகத்தினர், திருவிழாக்காலத்தில் அதிகமான மக்கள் இங்கு வருவதால் இடப்பற்றாக்குறை ஏற்படும் எனக் கூறி இடம்தர மறுத்துள்ளனர். எனினும் இராணுவத்தினர் புத்தர் கோயில் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை இரவோடு இரவாகக் கொண்டுவந்ததுடன் புத்தர் கோயில்கட்டவும் தொடங்கியுள்ளனர். அப்போது திடீரென யாரோ பனிச்சங்காய்களைப் பிடுங்கி ‘சடசட’வெனக் கோயில்கட்டியவர்கள்மீது எறிந்துள்ளனர். உடனே சுற்றியுள்ள பகுதிகளைத் தேடிப்பார்க்கும்போது அங்கு யாரையும் காணவில்லை. இதனால் அவர்கள் பயந்துபோய் கோயில்கட்டுவதை விட்டுவிட்டு ஓடியுள்ளனர். அடுத்தநாள் இராணுவத்தினருக்கு அம்மை போட்டுள்ளது. இருபத்தோருநாளாகியும் குறையவில்லை. இதனால் இராணுவத்தினர் கண்ணகை முத்துமாரியம்மன் கோயில் பூசாரியிடம் சென்று நடந்தவற்றைக் கூற, அவர் அனைவருக்கும் நூல்கட்டியுள்ளார். அதன்பின் அம்மை இறங்கியுள்ளது. இச்சம்பவத்திற்குப் பின்னர் புத்தர் கோயில் கட்டுவதைக் கைவிட்டதுடன் அங்கிருந்த இராணுவமுகாமையும் அகற்றிச் சென்றுள்ளனர்.

இக்கதை இலங்கையில் நடைபெற்ற காணி அபகரிப்பு தொடர்பானது. இலங்கையில் தமிழர் பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றல், புத்த சிலைகள் வைத்தல் என்னும் முறையில் நில அபகரிப்பு இடம்பெற்றது. பல இடங்களில் புத்தர் சிலைகள் அடிக்கடி முளைத்தன. அத்துடன் சிங்கள இராணுவத்தினரும் தாங்கள் தங்கியிருந்த பகுதிகளில் விகாரைகளை அமைத்தனர். அவ்வாறு கிடாச்சூரியிலுள்ள இராணுவத்தினர் கண்ணகை முத்துமாரியம்மன் கோயிலருகில் விகாரையை அமைக்க முற்பட்டுள்ளனர். இங்கு விகாரை அமைப்பதற்கு மக்களுக்கு விருப்பமில்லை. ஆனால் தடுக்கவும் முடியாது. இச் சூழலில் இராணுவத்தினர் கோயிலுக்கருகில் விகாரை அமைக்கத் தொடங்கியபோது அம்மன் நேரடியாகத் தோன்றாமல் மறைமுகமாகத் தடுக்கின்றார். அத்துடன் இராணுவத்தினருக்கும் அம்மைத் தொற்று நோயைப் பரப்புகின்றார். இதன் பின்னர் இராணுவத்தினர் புத்த விகாரை அமைக்கவில்லை. அத்துடன் அவர்களும் அங்கிருந்த தங்களது இராணுவக் காவல் அரணை அகற்றுகின்றனர். விகாரையைக் கட்டவிடாமல் தடுத்தல், அம்மைத் தொற்று நோயை பரப்பியது ஆகிய செயல்களை மாரியம்மன் செய்ததாக மக்கள் நம்புகின்றனர்.

## கதை 5:

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் என்னும் ஊரிலுள்ள கள்ளிமேடு, முத்துமாரியம்மன் கோயிலில் நடைபெற்ற நிகழ்வாக இச்சம்பவத்தைக் கூறுகின்றனர்.

ஒருமுறை இந்தியன் ‘ஆமி’ தம்பலகாமத்தைச் சுற்றிவளைத்து மக்கள் அனைவரையும் கோயிலுக்குள் கொண்டுவந்து இருத்தியுள்ளார்கள். அப்போது தலையாட்டியையும் கொண்டிருத்தி வைத்துள்;ளான்.

கோயிலில் பிடித்துவைத்துள்ள ஆண்கள் ஒவ்வொருவரையும் தலையாட்டியிடம் கேட்க அவ்வூர் இளைஞர்களில் மூவரைப்பார்த்து மட்டும் தலையாட்டி தலையாட்ட, ஏனையவர்களை விட்டுவிட்டு அம்மூன்று பேரையும் அடித்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர். இதனால் பிடிபட்ட இளைஞர்களின் உறவினர்களும் மக்;களும் தங்களது வீடுகளுக்குச் செல்லாமல் துக்கத்தினால் கோயில் அழுது புலம்பியபடி இருந்துள்ளனர். சற்றுநேரத்தில் அந்த ‘ஜீப்’ மீண்டும் வந்துள்ளது. இவர்கள் பயத்தில் இருக்கவும், வந்த ‘ஜீப்’ கோயில் வாசலில் நின்றுள்ளது. ஏற்றிச்சென்றவர்களை கோயில் வாசலிலே இழுத்துப் போட்டுவிட்டு ஜீப் சென்றுள்ளது. இதைப்பார்த்த மக்கள் ‘அரோகரா’ எனக் கண்ணீர்விட்டு அழுதுள்ளனர். இந்நிகழ்வு தற்போதும் அம்மக்கள் வாழ்வில் மறக்கமுடியாத ஒன்றாக உள்ளது.

## கதை 6:

யாழ்ப்பாணத்திலுள்ள ஆவாரம்பட்டி முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவின்போது ஒருவர் சயனநிலையில் பறவைக்காவடி எடுத்துவந்தார். அவர் உடல் முழுவதும் அலகுத்தியிருந்தது. அலகைக் கழற்றிய பின் உடலெல்லாம் இரத்தம் வடியவந்து அம்மனை வழிபட்டார். அவர் பறவைக்காவடி எடுப்பது தொடர்பாக பின்வரும் கதையைக் கூறினார்.

இவரது பெயர் சந்திரன் அராலியைச் சேர்ந்த இவர் தற்போது கனடாவில் வசித்து வருகின்றார். இவர் சிறுவயதிலிருந்தே முத்துமாரியம்மன் மேல் மிகவும் பக்தி கொண்டவர். ஒருநாள் மாலைநேரம் அவரும் அவர் நண்பர்கள் இருவரும் ஆற்றிற்குச்சென்று மீன்பிடித்துவிட்டு இரவு ஏழுமணியளவில் வீடு திரும்பியுள்ளனர். அப்போது இவர்களை இராணுவம் பிடித்து, அடித்து மூன்றுபேரையும் ஜீப்பில் ஏற்றியுள்ளனர். பின் அராலியிலுள்ள கேம்பில் வைத்து இரண்டுநாள் அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். பின்னர் அன்றிரவு ஜுப்பிலேற்றி வேறொரு ‘கேம்’பிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்களின் உடல்முழுவதும் காயங்கள்; ஜுப்பில் உணர்வு இல்லாமல் கிடந்துள்ளனர். அப்போது இவர்களை ஆமிக்காரன் ஒருவன் ஜீப்பினுள் போட்டுத் தலையைக் கால்களால் மிதித்துள்ளான். அவ்வாறு மிதிக்கும்போது லோகநாதனுக்கு வலியில் லேசாக

உணர்வுவந்து முணங்கியுள்ளார். அப்போது ஆமிக்காரன் இவரின் தலைமுடியைப்பிடித்து இழுத்து 'இறங்கி ஓடு' எனக் கூறியுள்ளான். ஆனால் இவரால் எழுந்து நிற்கவே முடியவில்லை.

அப்போது வீதி மிகவும் இருட்டு இருந்துள்ளது. ஒருவன் இவரை ஜுப்பிற்குள்ளிருந்து வெளியே இழுத்துப்போட்டு பூட்ஸ் காலால் மிதித்துக் 'கொட்டியா ஓடு' எனக் கத்தியுள்ளான். இவர் மெல்ல மெல்ல எழும்ப, மீண்டும் அவரை அடித்து உதைத்துத்தள்ளி 'ஓடு' எனக் கத்த, இம்முறை இவர் எழுந்து வீதி வழியாக ஓடாமல் காட்டுக்குள் இறங்கி ஓடியுள்ளார். அப்போது ஆமியில் ஒருவன் இவரைநோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளான். அப்போது இவர் மாரியம்மனிடம் 'நான் இனி உயிரோடு இருப்பேனா? இல்லையா? எண்டு தெரியாது. அப்படி என்ன உயிரோடு வெச்சா இந்த உடல் முழுவதும் முள்ளுக்குத்தி உன்வீதிக்கு வருவேன்' என வேண்டியுள்ளார்.

இவர் காட்டுக்குள் இறங்கி ஓடியதால் உடலெல்லாம் முட்கள் கிழித்து இரத்தம் வழிந்துள்ளது. காடெல்லாம் தாண்டி அராலிச்சந்தி வரை ஓடிவந்து பார்த்துள்ளார்; ஜுப்பைக் காணவில்லை. பின்னர் அங்கிருந்து நடந்துவந்து ஒரு பிள்ளையாயர் கோயிலில் படுத்துள்ளார் பின் காலையில் நடந்து வீட்டிற்கு வந்துசேர்ந்துள்ளார். வீட்டிலுள்ளவர்கள் இவரை அங்கே வைத்திருக்கவில்லை. ஏனெனில் ஆமி இவரைத் தேடிவரலாம் எனப் பயந்து கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளனர். பின்னர் 1999இல் இவர் கனடாவிற்குச் சென்றுள்ளார். தற்போதும் அங்கே வாழ்ந்துவருகின்றார். இவருடன் பிடித்துச்சென்றவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? என்ன நடந்தது? என்பது இன்றுவரை தெரியவில்லை. 'இந்த உயிர் அம்மா தந்தது. அதனால் அவாட மண்ணில் இரத்தம் சிந்துகின்றேன்'; என அவரது கதையைக் கூறினார்.

இலங்கையில் இராணவத்தினர் இளைஞர்களைப் பிடித்துச் சென்றால் உயிரோடு மீண்டு வருவது சாத்தியமில்லை என்னும் அரசியல் சூழலுள்ள காலத்தில் மக்கள் தங்கள் அச்சம், தவிப்பு ஆகியவற்றைத் தாங்கள் நம்பும் தெய்வத்துடன் இணைத்துள்ளனர். இவ்விரு கதைகளிலும் இராணுவத்தினரால் ஏற்றிச் சென்ற இளைஞர்கள் அதிசயமாக உயிர் தப்புகின்றனர். இறப்போம் என நினைத்த சூழலில் உயிர் தப்பும்போது அதை மக்கள் அம்மனின் செயலாகக் கருதுகின்றனர். அத்துடன் உயிர் தப்பியவர்கள் இன்றுவரை அம்மனுக்கு நேர்த்தி செலுத்துபவராகவும் உள்ளனர்.

இக்கதைகள் போர்ச்சூழலின் அச்சுறுத்தலான வாழ்வை மாரியம்மன்; தொடர்பான நம்பிக்கைகளுடன் இணைத்து வெளிப்படுத்துகின்றன. அவற்றை விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய கதைகள், இராணுவத்தினருடன் தொடர்புடைய கதைகள் எனப் பிரித்தறியலாம். இக் கதைகளில் கோயிலுக்கான இடத்தை இராணுவத்தினர் அபகரிக்கும்போது மாரியம்மன் கண்ணுக்குப் புலப்படாமல் வந்து தடுக்கின்றார். இராணுவத்தினர் மாரியம்மன் கோயிலில் மக்கள் வழிபடுவதற்கு அனுமதி அளிக்காதவிடத்தில் அவர்களைப் பயமுறுத்தல், அவர்களின் முக்கிய பொருள்களைக் காணாமல் போகச் செய்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனை மாரியம்மன் செய்ததாக மக்கள் நம்புகின்றனர். இங்கு மக்கள் நிலத்தை அபகரிக்கும்போது அதனைத் தடுக்கும் மக்களை காப்பாற்றும் என்னும் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கைகள் நோய்தீர்த்தல், வளமை ஆகிய தேவைகளிலிருந்து வேறுபடுகின்றது. ஏனெனில் போர்ச்சூழலின் வாழ்வு நிலையை கதைகள் ஏற்றிச் சுமக்கின்றன எனலாம்.

அராலியில் மூவரைப் இராணுவத்தினர் பிடித்துச் செல்லும்போது அதில் ஒருவரைக் காப்பாற்றுவதாக கதை அமைந்துள்ளது. ஏனைய இருவரும் காணாமல் ஆக்கப்படுகின்றனர். அவர்கள் பற்றிய தகவல்களில்லை. இங்கு அம்மன் அனைவரையும் காக்கவில்லை. ஆனால்; தன்னிடத்தில் பௌத்த விகாரை கட்ட வந்தவர்களை விரட்டுகின்றது. தன் கோயில் கிணற்றில் குளிக்கும் விடுதலை இயக்கத்தை இராணுவம் மூலம் கொலை செய்கின்றது. இக்கதைகள் ஒன்றுக்கு ஒன்று முரணானதாக அம்மனை கட்டமைக்கின்றன. மக்களின் தேவைகள் பொறுத்து கதைகள் மாற்றம் பெறுகின்றன. வாழ்க்கையில் மக்கள் எதிர்கொள்ளும் இடர், போர் ஆகியவற்றிலிருந்து தங்களை மீட்பதற்கான நம்பிக்கையின் ஒரு பகுதியாக கதைகள் அமைகின்றன.

இவற்றிலுள்ள அம்மன் என்னும் நம்பிக்கை முக்கிய விடயமாகும். இங்கு அம்மன் தான் இருக்குமிடத்திற்கு ஆபத்து நேரும்போது தடுக்கின்றார். இதன் வாயிலாகக் கோயில் நிலம் சொத்துக்களை அபகரித்தால் அம்மன் தண்டிக்கும் என்னும் கருத்து மேலோங்கின்றது. அதுபோல் தன் எல்லைக்குள் தான் விரும்பாமல் வருபவர்களை அச்சுறுத்துகின்றது ஆனால் அம்மன் மக்களைக் காப்பாற்ற தாமதிக்கின்றது. அம்மனும் ஒரு குறிப்பிட்ட வரையறை சார்ந்து இயங்குவதைக் காணலாம்.

இலங்கை அரசியலை மக்கள் எவ்வாறு உணர்கின்றனர் வெளிப்படுத்துகின்றனர் புரிந்து வைத்திருக்கின்றனர் அதனுள் வாழ்தலை எவ்வாறு கட்டமைத்துள்ளனர். இங்கு தெய்வத்தால் அனைவரையும் காக்க முடியவில்லை. உயிர் தப்பியவரகள் அதை மாரியம்மன் அருளாக நம்புகின்றனர். அவர்கள் நேர்த்தி வழிபாடு மூலம் அதனை மீண்டும் நினைவு படுத்துகின்றார்.

## முடிவுரை

இக்கதைகளில் அம்மன் என்னும் நம்பிக்கை முக்கிய விடயமாகும். இங்கு அம்மன் தான் இருக்குமிடத்திற்கு ஆபத்து நேரும்போது தடுக்கின்றார். இதன் வாயிலாகக் கோயில் நிலம் சொத்துக்களை அபகரித்தால் அம்மன் தண்டிக்கும் என்னும் கருத்து மேலோங்கின்றது. அதுபோல் தன் எல்லைக்குள் தான் விரும்பாமல் வருபவர்களை அச்சுறுத்துகின்றது ஆனால் அம்மன் மக்களைக் காப்பாற்ற தாமதிக்கின்றது. அம்மனும் ஒரு குறிப்பிட்ட வரையறை சார்ந்து இயங்குவதைக் காணலாம்.

இலங்கை அரசியலை மக்கள் எவ்வாறு உணர்கின்றனர் வெளிப்படுத்துகின்றனர் புரிந்து வைத்திருக்கின்றனர் அதனுள் வாழ்தலை எவ்வாறு கட்டமைத்துள்ளனர். இங்கு தெய்வத்தால் அனைவரையும் காக்க முடியவில்லை. உயிர் தப்பியவரகள் அதை மாரியம்மன் அருளாக நம்புகின்றனர். அவர்கள் நேர்த்தி வழிபாடு மூலம் அதனை மீண்டும் நினைவு படுத்துகின்றார்.

## References

Arasu, V.C. Paakkiyaraja. (2002) Nattar Samigals, Thannanaane Publications, Chennai, India

Perera Sahangk, Tha. 2003. 'Structure Methods of Identity, Politics, Practice. Confusion.' Tha, Sanathanan (Ed.). Panuwal, Issue 1, Colombo, Sri Lanka.

Ramanathan, Aaru. 1977. The Incarnation of Gods in Puranas. Arangam, Symbol, Form: A Study, Folk Studies, Manickavasagar Publications, Chidambaram, India

Ramanathan, Aaru. 2001. Living Traditions, Thannanaane Publications, Chennai, India

Saami, P. L. 1976. Mother Goddess Worship in Tamil Literature,New Century Book House Pvt. Ltd, Chennai, India

Sivathambi, K. 2002. Jaffna: Society, Culture, Ideology. Kumaran Book House, Colombo, Sri Lanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License